**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.68/2018**
**Prosecution Witnesses :5**

| | | | |
|---|---|---|---|
| Name | : **தென்னரசு** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **சிவனாண்டிதேவர்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(28.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் சிந்துபட்டிக்கு போய் இருந்த போது அங்கு போலிசார் விசாரணை செய்து கொண்டிருந்தனர். சம்பவயிடத்திற்கு வரைபடம் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். அதில் நானும் வெற்றிசெல்வனும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் கு.வி:**

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 18.01.2017ம் தேதி மாலை சுமார் 5 மணிக்கு எனது வயக்காட்டு தண்ணீர் பாய்ச்ச மாயாண்டி தேவர் மகன் மாயன் தோட்டத்து வழியாக நடந்து சென்ற போது அதுசமயம் அங்கு வந்து சிந்துபட்டி போலிசார் அவர்கள் என்னிடம் அப்போது அந்த வழியாக வந்த

எங்கள் ஊரை சார்ந்த கருத்த கண்ணன் மகன் வெற்றிசெல்வன் என்பவரிடமும் சிந்துபட்டி காவல் நிலைய குற்ற எண்.15/2017 வழக்கு பற்றி விபரத்தை எங்களிடம் சொல்லி மேற்கண்ட வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். அதில் நானும் வெற்றிசெல்வனும் கையெழுத்து செய்தோம் என போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.68/2018**

**Prosecution Witnesses :6**

| | | | |
|---|---|---|---|
| Name | : **வெற்றிசெல்வன்** | Caste | : |
| Father 's Name / Husband Name | : **கருத்தகண்ணன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)
**(28.07.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேட்டுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சாயத்து செயலாளராக இருந்து வருகிறேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் சிந்துபட்டி ரோடு வழியாக வந்து கொண்டிருந்த போது சிந்துபட்டி காவலர்கள் அங்கு நின்று கொண்டிருந்தனர். சம்பவயிடத்தில் வரைபடம் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். சம்பவயிடங்கள் குறித்து எங்களிடம் தகவல் கேட்டனர். அதில் நானும் தென்னரசும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அதில் என்ன விபரம் இருந்தது என்று படித்து காண்பித்தார்கள். **மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் அன்றைய தேதி மட்டும் விசாரித்தார்கள். போலிசார் கேட்டுக் கொண்டதற்கு

இனங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் எப்படி நடந்தது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**. இல்லை